செ.வெ.எண்: 56 நாள்:30.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளஅரசுமற்றும் தனியார் தொழிற்பயிற்சிநிலையங்களில் (ITI) சேர 04.08.2021 வரைமாணவ/மாணவிகள் விண்ணப்பிக்கலாம் எனநாகப்பட்டினம் மாவட்டஆட்சித்தலைவர் மருத்துவர்.அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளநாகப்பட்டினம்,திருக்குவளைமற்றும் செம்போடைஅரசுதொழிற் பயிற்சிநிலையங்களில் உள்ளபல்வேறுதொழிற் பிரிவுகளில் உள்ள 860 இருக்கைகள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சிநிலையங்களின் 50% அரசுஒதுக்கீட்டு இடங்களில் மாணவ/மாணவிகள் சேர்ந்திடwww.skilltraining.tn.gov.inஎன்ற இணையதளம் வாயிலாகவிண்ணப்பிக்க 04.08.2021 வரைகாலநீட்டிப்புசெய்யப்பட்டுள்ளது. 8-ம் வகுப்பு/ 10-ம்வகுப்பு தேர்ச்சிபெற்றவர்கள் இணையதளம் வாயிலாகவிண்ணப்பிக்கலாம். மேற்கண்டஅரசுதொழிற்பயிற்சிநிலையங்கள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டதிறன் பயிற்சிஅலுவலகம் ஆகியவற்றில் சேர்க்கைஉதவிமையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட இணையதளத்தில் உள்ளவிளக்ககையேட்டினைமாணவர்கள் பார்வையிட்டுஅறிவுரைகளைகவனமாகபடித்துவிண்ணப்பதைபூர்த்திசெய்யவும். அரசுதொழிற்பயிற்சிநிலையத்தில் பயிற்சியில் சேர்ந்துபயிற்சிபெறும் பயிற்சியாளர்களுக்குதமிழகஅரசால்

விலையில்லாபாடபுத்தகம்,வரைபடகருவிகள்,சீருடைகள்,தையல் கூலி, மூடு காலணிகள்,மடிக்கணிணி. மிதிவண்டிமற்றும் மாதஉதவிதொகைரூ.750/-வழங்கப்படுகிறது. பயிற்சிமுடித்தபயிற்சியாளர்களுக்குஅரசுமற்றும் தனியார் தொழிற் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் உள்ளது. மேலும் விவரங்களுக்கு 04365-250129 என்றதொலைபேசிஎண் மற்றும் govtitinagai@gmail.comஎன்றமின்னஞ்சல் முகவரியிலும் தொடர்புகொள்ளலாம் எனமாவட்டஆட்சித்தலைவர்,நாகப்பட்டினம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**